*2012 ஏப்ரல் 10] [டாக்டர் வி.எஸ். விஜய்]*

*தமிழகத்தில் நிலவுவதாலும், பொது மக்கள் இந்நோய் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை. காய்ச்சல் ஏற்பட்டால் பொது மக்கள் அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளை அணுகி அதற்குரிய சிகிச்சை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

*மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழக அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கைகளாலும், தீவிர சிகிச்சை முறையினாலும் இந்நோயின் தாக்கம் முழுவதுமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

## 2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சவுந்தரராசன், திரு. பாலகிருஷ்ணன், கவனியுங்கள். இப்போது மணி 11–58. இன்றைக்கு ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு எடுத்துவிட்டேன். இன்னொரு சிறப்புக் கவன ஈர்ப்பை எடுத்தால் எவ்வளவு நேரம் ஆகும் என்பதைத் தயவுசெய்து உங்களுடைய யூகத்திற்கே நான் விடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னுடைய கவனத்திற்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் தயாரானவுடன் அதை எடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும், உட்காருங்கள்.*

## 6. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

[2012 ஏப்ரல் 10

**திரு. ச. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 11 முதல் 15 வரையிலான, ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

## 7. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 26 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 15 – சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)**

---

**(அ) கோரிக்கை எண் 26 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.593,49,11,000/–, மூலதனக் கணக்கில் ரூ.887,08,57,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.170,00,05,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 26, திரு. வி.சி. சந்திரகுமார்.*